தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-3-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தரவரிசையை மேம்படுத்த**

**ஒரு நாள் பணிப்பட்டறை**

14 மார்ச் 2019 அன்று கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தரவரிசையை மேம்படுத்த ஒரு நாள் பணிப்பட்டறை திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்கத்தில் நடத்தப்பட்டது.

இதில் முனைவர் நீ. குமார் துணைவேந்தர் தலைமைதாங்கி தலைமையுரையாற்றினார். அதில் மாணவர் அமைப்பினை பலப்படுத்தி அவர்களின் தொழில்நிலை வேலைவாய்ப்பு அமைத்தல் போன்வற்றில் ஈடுபடுத்தி தரவரிசையை உயர்த்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். பல்வேறு சாதனைகள் ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத்தில் புரிந்தாலும் உலகளவில் தரவரிசையில் உரிய இடம் பெற வலியுறித்தினார். உலகத் தரவரிசைப்பட்டியலில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சிறப்பிடம் பெற விழிப்புணர்வு பட்டறை ஏதுவாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

சிங்கபூரிலிருந்து உயர்கல்வியை தரவரிசைப்படுத்தும் நிறுவனத்தின் தெற்காசிய மண்டல இயக்குனர் திரு. ரிதின் மல்ஹோத்ரா டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் தரவரிசை முறைகளைப்பற்றி விளக்கினார்கள்.

அக்சென்டொரா நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அதிகாரி திரு. சிவக்குமார் நடராஜன் தேசிய தரவரிசை நிறுவனங்களின் கட்டமைப்பு தரவரிசைத் தரவுகளை கையாளும் முறை மற்றும் மேம்படுத்தும் முறைகளைப் பற்றியும் விளக்கினார்.

திரு. அஸ்வின் பெர்னான்டஸ் குவாக்கரெலி சைமன்ட்ஸ் (க்யூ.எஸ்) தரவரிசைக்கான சட்ட திட்டங்கள் தகுதிகள் குறித்து பேசினார்.

அன்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நிறைவு உரை வழங்கி பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

இப்பணிப்பட்டறையை திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்கக இயக்குனர் முனைவர் ஜே. வெங்கட் பிரபு அவர்கள் ஏற்பாடு செய்தார். முனைவர் எஸ். முரளிகிருஷ்ணசாமி, பேராசிரியர் (உழவியல் துறை) வரவேற்புரை ஆற்றினார். முனைவர் சி. வேலவன் இணைபேராசிரியர் (வேளாண்மை கிராமிய மேலாண்மை) நன்றி உரை வழங்கினார். இப்பணிப்பட்டறையில், பல்கலைக்கழக முதல்வர்கள், இயக்குனர்கள் மற்றும் பேராசிரியர்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்